**உஹன பிரதேச சபை**
**அம்பாறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 27 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 23 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்தெம்பர் 06 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து உஹன பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) முற்பணப் பதிவேட்டின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத முற்பண மீதி ரூபா 33,049 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முற்பணமாகக் கிடைத்த ஆதனவரிக் கணக்கின் ஆரம்ப மீதியில் இல்லாத முற்பணமாகப் பெறப்பட்ட பெறுமதியாக ரூபா 32,871 தொகை வருமானத்திற்கு எடுத்தமையினால் செயற்பாட்டு இலாபம் அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) வைப்புப் பதிவேட்டின் பிரகாரம் செலுத்தவேண்டிய கடை வைப்பு மீதி ரூபா 1,620,000 ஆக இருந்த போதிலும், அது ரூபா 1,185,000 ஆக ரூபா 435,000 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) நிர்மாண வைப்பிற்காக கிடைக்க வேண்டிய ரூபா 2,950,000 தொகை ஆண்டின் போது கிடைக்கப்பெறாதிருந்த போதிலும், வருமானத்திற்கான வைப்பாக நடைமுறைப் பொறுப்பின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) 2015 ஆம் ஆண்டின் போது உதவியாக நூலகத்திற்குக் கிடைத்த ரூபா 292,835 பெறுமதியான 836 புத்தகங்கள் கணக்கீடு செய்யப்படாமையினால் நிலையான சொத்துக்கள் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.3.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

கீழே குறிப்பிடப்படுகின்ற சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) பிரதேச சபை விதி 180 | பிரதேச சபையின் வருமானத்தைச் சேகரித்தல், களஞ்சியக் கட்டுப்பாடு, காசோலை விநியோகித்தல் என்பவற்றுக்குரிய உத்தியோகத்தர்களினால் பிணைப் பணம் வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிதிப்பிரமாணம் 1646 | சபைக்குச் சொந்தமான 24 வாகனங்களுக்கான மாதாந்த பிரயாணம் தொடர்பான பொழிப்பொன்றுடன் மாதத்தின் நாளாந்த ஓட்ட அட்டவணை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பிரதேச சபையின் வேலைச் செயற்பாடுகளின் நிதி விளைவுகள் ரூபா 141,902 தொகையான வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நிதி விளைவுகள் ரூபா 2,795,624 தொகையான வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினமாக இருந்தமையால் நிதி விளைவில் ரூபா 2,653,722 தொகையான அதிகரிப்பைக் காண்பித்தது.

**2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

மீண்டெழும் வருமானத்தை பகுப்பாய்வு செய்த போது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது வீதவரியும் வரியும், வாடகை வருமானம் மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணம் போன்ற மூலங்களில் 29 சதவீதம் முதல் 43 சதவீதம் வரையிலான வீச்சில் அதிகரிப்பும், சேவைகளுக்கான கட்டணம், தண்டப்பணமும் பிடியாணைக் கட்டணமும் மற்றும் ஏனைய வருமானம் போன்ற மூலங்களில் 05 சதவீதம் முதல் 32 சதவீதம் வரையிலான வீச்சில் குறைவையும் காண்பித்தது.

மீண்டெழும் செலவினத்தை பகுப்பாய்வு செய்த போது முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது பிரயாணச் செலவினம், வழங்கல் மற்றும் உபகரணங்கள், போக்குவரத்து தொடர்பாடல் மற்றும் உதவிப் பணம் என்ற மூலங்களில் 08 சதவீதம் முதல் 46 சதவீதம் வரையிலான வீச்சில் அதிகரிப்பும், சம்பளமும் படிகளும், பழுதுபார்த்தல் மற்றும் திருத்தம் செய்தல், பராமரித்தல் மற்றும் ஓய்வூதியச் சம்பளம் போன்ற செலவின மூலங்களில் 06 சதவீதம் முதல் 43 சதவீதம் வரையிலான வீச்சில் குறைவையும் காண்பித்தது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமான விடயம் | 2016 ஆம் ஆண்டின் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | 2016 ஆம் ஆண்டின் உள்ளபடியான வருமானம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. |
| வீதவரியும் வரியும் | 1,229,876 | 1,419,644 | 3,375,198 |
| வாடகை வருமானம் | 4,703,148 | 4,421,853 | 245,244 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 955,000 | 808,575 | - |
| சேவைகளுக்கான கட்டணம் | 325,000 | 277,750 | - |
| தண்டப்பணமும் பிடியாணைக் கட்டணமும் | 2,160,000 | 1,567,363 | 552,666 |
| ஏனைய வருமானம் | 1,925,000 | 970,340 | - |

### 2.3.2 வீதவரியும் வரியும்

சபையினால் இறுதித் தடவையாக ஆதனவரி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்ட 2007 ஆம் ஆண்டின் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின் போதும் ஆதனவரி அறவிடல் இடம்பெற்றிருந்தது.

நிலுவை ஆதனவரி பதிவேட்டின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி ரூபா 3,375,198 ஆக இருந்ததுடன் அப்பணத்தை அறவிடுவதற்காக சபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 ஏனைய வருமானம்

சபை அதிகாரப்பிரதேசத்தில் 12 தொலைபேசிக் கோபுரங்கள் காணப்பட்ட போதிலும், அதற்காக 2009 ஏப்ரல் 19 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் தொலைபேசி கோபுரங்களுக்காக குறைந்தது ஒரு கோபுரத்திற்கு ரூபா 20,000 வீதம் ரூபா 240,000 ஆரம்பக் கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், அக்கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 முத்திரைக் கட்டணம்

பதிவாளர் நாயகத்திடமிருந்து முத்திரைக் கட்டணமாக ரூபா 1,416,132 தொகை 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

---

சபையில் சேவையாற்றி இடமாற்றலாகிச் சென்ற 12 ஊழியர்களிடமிருந்தும் ஓய்வுபெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்தும் மீளாய்வாண்டின் ஆரம்பம் முதல் அறவிட வேண்டியிருந்த ரூபா 61,988 தொகையான ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

---

உஹன பிரதேச சபையினால் 2015 ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்ட ''கமின் கமட்ட தொறின் தொறட்ட'' 15000 கிராமங்களை கட்டியெழுப்பும் அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் ரூபா 1,000,000 வீதம் 17 வீதிகளுக்கு கொங்கிறீட் இடும் செயற்திட்டம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உரிய கோவை மற்றும் ஏனைய தகவல்களை கணக்காய்விற்கு பெற்றுத் தருமாறு பிரதேச சபைக்கு அறவித்திருந்த போதிலும், 17 ஒப்பந்தங்களில் 12 இன் தகவல்கள் மாத்திரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டமையினால் ரூபா 4,610,680 பெறுமதியான 05 ஒப்பந்தங்கள் தொடர்பாக கணக்காய்வு பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது.

(ஆ) தகவல்களை வழங்கிய சமூக அடிப்படையிலான 12 அமைப்புக்களில் 10 இனால் கேள்வி விலைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) 17 செயற்திட்டங்களில் 08 இற்கான கொங்கிறீட் பரிசோதனைக்கான கொடுப்பனவை மேற்கொள்ளும் போது விலைப்பட்டியலில் குறிப்பிடப்பட்ட பெறுமதி மாத்திரம் செலுத்த வேண்டியிருந்த போதிலும், 02 செற்திட்டங்களுக்காக ரூபா 2,184 பெறுமதியான விலைப்பட்டியல் தொடர்பாக தொழில்நுட்ப உத்தியோகத்தரின் சிபாரிசின் கீழ் ரூபா 73,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) மேற்கூறப்பட்ட வீதிகளில் UPS/DEV/UP-VIL/2015/01 மற்றும் UPS/DEV/UP-VIL/2015/16 என்ற இரண்டு செயற்திட்டங்களினதும் பௌதீக பரிசோதனையின் போது அளவிடைப் பத்திரங்களின் பிரகாரம் காணப்படவேண்டிய குறித்த உயரமான 12 அங்குலம் காணப்படாதிருந்ததுடன், அது 2 அங்குலம் மற்றும் 3 அங்குலங்களுக்கிடையிலான அளவில் குறைவாகக் காணப்பட்டது. அதனால் இந்த வீதி குறித்த நியமத்தில் காணப்படாதிருந்த போதிலும், தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் சிபாரிசுகள் அடிப்படையில் 02 ஒப்பந்தங்களுக்காக உரிய மொத்தப் பெறுமதியான ரூபா 1,957,921 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(உ) மேற்கூறப்பட்ட செயற்திட்டஙகளுக்குரிய 04 வீதிகள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட கொங்கிறீட் தர பரிசோதனை, வீதி கொங்கிறீட் இடப்பட்ட தினத்தில் பெறப்பட்ட கொங்கிறீட் மாதிரி பயன்படுத்தப்பட்டமையால் அவ்வறிக்கை சரியானதாக இருக்கவில்லை.

(ஊ) UPS/DEV/UP-VIL/2015/18 செயற்திட்டத்தின் கொங்கிறீட் பரிசோதனை 2015 நவம்பர் 09 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்த போதும், செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி 2015 நவம்பர் 14 ஆந் திகதியாகும். மேலும், செயற்திட்டத்திற்கான கூறுவிலைகளின் பெறுகை 2015 நவம்பர் 19 ஆந் திகதி ஆகவும், உடன்படிக்கை செய்யப்பட்ட திகதி

2015 நவம்பர் 24 ஆந் திகதியாகவும் இருந்தன. அதன் பிரகாரம் சபையினால் கோவைகளுக்காக போலியான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 3.3 வாகனக் கட்டுப்பாடு

பின்வரும் வடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதி அமைச்சு, புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சு, கிழக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சு மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் ஊடாக சபைக்கு கிடைக்கப்பெற்ற 20 வாகனங்களின் உரித்தைக் கையேற்பதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. குறிப்பிட்ட காலத்தில் உரித்து கையேற்கப்படாமையினால் வருடமொன்றிற்கு ரூபா 730,000 இற்கு அண்ணளவான தண்டப்பணமொன்று இந்த வாகனங்களின் உரித்தை கையேற்கும் போது செலவிட வேண்டியிருந்தது.

(ஆ) சபைக்குச் சொந்தமான 08 வாகனங்கள் ஓட்டமுடியாத நிலையில் காணப்பட்டதுடன் அந்த வாகனங்களில் பழுதுபார்க்கக்கூடிய வாகனங்களை பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கும், பயன்பாட்டிற்கு எடுக்கமுடியாத வாகனங்களை விற்றுத் தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையின் முன்னாள் உபதலைவரால் 2014 பெப்ரவரி 28 ஆந் திகதி முதல் 2015 மே மாதம் 11 ஆந் திகதி வரை சபையின் கெப் வண்டி 1,711.75 லீற்றர் எரிபொருளைப் பயன்படுத்தி 13,964 கிலோமீற்றர் அளவு பிரணாயங்களைச் செய்வதற்கு பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், உரிய காலத்தில் அவர் உஹன பிரதேச செயலகத்தில் திவிநெகும அபிவிருத்தி உத்தியோகத்தராக செயற்பட்டிருந்தமையால் இந்த கெப் வண்டி சட்டரீதியற்ற வகையில் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) சபையின் கெப் வண்டி பொறுப்புவாய்ந்த ஒரு உத்தியோகத்தரின் மேற்பார்வையின்றி 2013 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலத்தில் 2,618 கிலோமீற்றர் ஓட்டத்தில் ஈடுபட்டிருந்தது.

(உ) கெப் வண்டிற்குரிய 2014 மே 09 ஆந் திகதி முதல் 2014 ஒக்தோபர் 29 வரையும், 2015 யூலை 15 முதல் 2015 நவம்பர் 20 வரையுமான நாளாந்த ஓட்ட அட்டவணை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஊ) 2013 செப்தெம்பர் 28 ஆந் திகதி முதல் 2014 மே 08 வரையான காலப்பகுதிக்குரிய ஓட்டத்தின் பிரகாரம் கெப் வண்டி ஓட்டத்தில் ஈடுபட்ட 9,585 மொத்த கிலோமீற்றர்களின் எண்ணிக்கைக்குச் சமமாகச் செலவிட வேண்டிய எரிபொருளின் அளவு 1,198 லீற்றராக இருக்க வேண்டியிருந்த போதிலும், பயன்படுத்தப்பட்ட எரிபொருளின் அளவு 1,526 லீற்றராக இருந்தமையால் தற்போதைய விலையின் பிரகாரம் ரூபா 31,160 பெறுமதியான 328 லீற்றர் எரிபொருள் மேலதிகமாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(எ) ஓட்டநிலையில் காணப்பட்ட 25 வாகனங்களில் 02 வாகனங்களுக்காக மாத்திரம் வருடாந்த வருமான அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருந்ததுடன் மிகுதி 23 வாகனங்களுக்காக உரிய உத்தியோகத்தர்களால் வருமான அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஏ) ஓட்ட நிலையில் காணப்பட்ட 25 வாகனங்களில் 07 வாகனங்களுக்காக மாத்திரம் காப்புறுதிச் சான்றிதழ் பெறப்பட்டிருந்ததுடன் மிகுதி 18 வாகனங்களுக்காக காப்புறுதிச் சான்றிதழ் பெறப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதீடு செய்யப்பட்ட செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 02 சதவீதம் முதல் 50 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் காணப்பட்டமையினால் பாதீடு சிறந்த முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

### 4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதி விநியோகிக்கப்பட்ட தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 128 இன் பிரகாரம் சபையினால் 2016 ஆம் ஆண்டிற்காக வருடாந்த பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமையும் கட்டுப்பாடும்

கீழே காண்பிக்கப்படுகின்ற முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் சபை விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| முறைமைகள் | கவனம் செலுத்த வேண்டிய துறைகள் |
|---|---|
| (அ) வருமான நிர்வாகம் | i. நிலுவை வருமானத்தை அறவிடுதல். |
| | ii. உப விதிகளை விதித்தல் |
| | iii. வருமான மூலங்களை இனங்காணல் |
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீட்டைச் சரியானதாகத் தயாரித்தல் |
| (இ) களஞ்சிய நிர்வாகம் | விரைவாக சரி பிழைகளை கண்டறியக்கூடிய முறையில் பொருட்களை களஞ்சியப்படுத்தல் |
| (ஈ) சொத்துக் கட்டுப்பாடு | நிலையான சொத்துக்களின் உரித்தை கையேற்றல் |
| (உ) கணக்கீடு | சொத்துக்களை கணக்குகளுக்கு கொண்டு வருதல். |